सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு **C.P. ராதாகிருஷ்ணன்** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை




**BEST - PUDUCHERRY**

( **B**usiness, **E**ducation, **S**piritual and **T**ourism Hub - Puducherry )

**31 சூலை, 2024**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு **C.P. ராதாகிருஷ்ணன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை

குடி ஓம்பல், வன்கண்மை, நூல் வன்மை, கூடம்,
மடி ஓம்பும், ஆற்றல் உடைமை, முடி ஓம்பி,
நாற்றம் சுவை கேள்வி நல்லார் இனம் சேர்தல்
தேற்றானேல், தேறும் அமைச்சு.

- கணிமேதாவியார் இயற்றிய ஏலாதி
(பதினெண் கீழ்க்கணக்கு நூல்)

"குடிகளைப் பாதுகாத்தலும், நல்லறமும், கலங்காத அறிவும், சோம்பல் இல்லாமையும், அரசாட்சியைப் பாதுகாத்து, மணம், சுவை, கேள்வி இவற்றைப் பெற்று, நல்லவர்களுடன் சேர்தலும் இவை நன்மை தருவனவென்று துணிவானாயின் அவன் அமைச்சனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான்".

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! மற்றும் இந்த மேன்மைமிகு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே!***

**வணக்கம்!**

நினைவுகூறத்தக்க இந்த தருணத்தில், மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கும், புதுச்சேரி வாழ் மக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தையும் மற்றும் நல்வாழ்த்துகளையும் முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** புதுச்சேரி சட்டப்பேரவையில் 2024-25ஆம் ஆண்டுக்கான எனது உரையை நிகழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பதினைந்தாவது சட்டப்பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடரைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். பெருமை வாய்ந்த இந்த அவையில், இது எனது முதல் உரையாகும்.

**3.** மக்களவைக்கான பொதுத் தேர்தல்-2024, சுமூகமாகவும் அமைதியான முறையிலும் நடந்ததைக்கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். தேர்தலை சீராக நடத்தியமைக்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், தேர்தல் துறைக்கும், காவல் துறைக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தருணத்தில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, காவல் துறை விழிப்புணர்வுடன் செயல்பட்டதால் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏதுமின்றி இத்தேர்தல் நடைபெற்றது. இதற்காக, இத்துறை நம் பாராட்டுக்குரியது. தொடர்ந்து மூன்றாவது முறையாக பாரதப் பிரதமராக பதவி ஏற்றமைக்காக திரு நரேந்திர மோதி ஜி அவர்களுக்கு நான் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் தலைமையின்கீழ், கடந்த பத்து ஆண்டு கால ஆட்சியில் குறிப்பாக பொருளாதார சீர்திருத்தங்கள், உள்கட்டமைப்பு, முதலீடுகள் போன்ற துறைகளில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

**4.** 2016ஆம் ஆண்டுக்கு முந்தைய ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான நிலுவைத் தொகை மற்றும் அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு-சார்பு கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலான நிலுவைத் தொகைக்காக மத்திய அரசு 2023-24ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் ₹ 271 கோடியை வழங்கியுள்ளது. இதன்மூலம், சுமார் 16,000 ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் மற்றும் 1,500 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் பயனடைந்துள்ளனர். இதற்காக, இவ்வாட்சிப்பரப்பின் நிர்வாகம் மத்திய அரசுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**5.** ஏழைகள் மற்றும் சமுதாயத்தில் நலிவுற்றோர்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்தும், சாலைகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு, மின் விசை, சுகாதாரம், கல்வி, தகவல் தொழில் நுட்பம், தொழில்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம், வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் முதலிய முக்கியமான துறைகளில் வளர்ச்சியை உறுதி செய்வதிலும் இந்த அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது. செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் நலிவுற்ற மக்களிடம் விரைவாக சென்றடையும் பொருட்டு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்காகவும் அரசுத்துறைகளில் உள்ள காலி

பணியிடங்களை நேரடிப் போட்டித் தேர்வுகள் மூலம் இந்த அரசு நிரப்பி வருகின்றது. அதன் அடிப்படையில், கடந்த நிதி ஆண்டில் நேரடிப் போட்டித் தேர்வுகள் மூலம் பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள 1,119 பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன.

**6.** மத்திய உள்துறை அமைச்சகத்தின் நாடாளுமன்ற நிலைக்குழுவினரின் சமீபத்திய வருகைக்கு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்திருந்த இவ்வாட்சிப்பரப்பின் நிர்வாகத்திற்கு எனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், குழுவின் தலைவர் அவர்கள் துறைகளின் செயல்பாடுகளை பாராட்டியும், இவ்வாட்சிப்பரப்பின் நிர்வாக செயல்பாடுகளில் முழு திருப்தியையும் வெளிப்படுத்தியிருந்தார்.

**7.** இவ்வாட்சிப்பரப்பின் நிதி ஆதாரங்கள் அளவாகவே இருப்பதால் இந்த அரசு செலவினங்களை வருவாய்க்குத் தகுந்தவாறு சீர் செய்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இருப்பினும், ஏழை, எளிய மக்களின் நலன்களுக்கு தேவையான நிதியை வழங்குவதை இந்த அரசு உறுதிப்படுத்தியுள்ளது. நிதி நிலையைப் பொறுத்தவரை, இந்த அரசு 2023-24ஆம் ஆண்டின் மொத்த ஒதுக்கீடான ₹ 12,250 கோடியில், ₹ 11,464 கோடி அதாவது 93.58 விழுக்காடு செலவு செய்துள்ளது. இந்த செலவினம் அதற்கு முந்தைய ஆண்டு (2022-23) செலவினத்தை ஒப்பிடுகையில் 6.55 விழுக்காடு கூடுதலாகும்.

**8.** ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் ஒரு மிக முக்கிய நிதிக் குறியீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியானது திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நமது ஆட்சிப்பரப்பின் 2023-24ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியாக ₹ 48,052 கோடி (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டிருந்தது. இது அதற்கு முந்தைய ஆண்டைவிட (2022-23) 7.54 விழுக்காடு கூடுதலாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2022-23ஆம் ஆண்டில் ₹ 2,44,469-ல் (நடப்பு விலை) இருந்து 2023-24ஆம் ஆண்டில் ₹ 2,63,068-ஆக (நடப்பு விலை) உயர்ந்துள்ளது. இது, 7.61 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டுகிறது.

**9.** என்னுடைய முகப்புரையின் நிறைவாக, முந்தைய நிதி ஆண்டில் பல்வேறு துறைகளின்கீழ், இந்த அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சில முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

## வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

**10.** நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வேளாண் உற்பத்தியை அதிகரிக்க இந்த அரசு உற்பத்தி ஊக்கத் தொகை, சாகுபடிக்கு பிந்தைய மானியம், வேளாண்

மற்றும் உயர் தொழில்நுட்ப இடுபொருட்களை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. மேலும், தேசிய தோட்டக்கலை திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி அதன் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியையும் ஊக்குவித்துள்ளது.

**11.** பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்) என்னும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை A3 மாநிலங்களுக்கிடையே முதலிடத்தில் வரிசைப்படுத்தியுள்ளது என்பதை பகிர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய சந்தா தொகை முழுவதையும் மாநில அரசு செலுத்த வேண்டிய சந்தா தொகையுடன் சேர்த்து புதுச்சேரி அரசே செலுத்தி வருகிறது என்பதை இத்தருணத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். மேலும், இத்திட்டத்தின்கீழ், 2021 ரபி பருவத்திற்கான பயிர் காப்பீட்டுத் தொகையான ₹ 13.22 கோடி 9,140 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதியில் 2023ஆம் ஆண்டு பருவம் தவறி பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரணத்தொகை ₹ 2.81 கோடி 4,641 நெல் சாகுபடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் ஏனாம் பகுதியில் வெள்ளத்தால்

பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுக்கு நிவாரணமாக ₹ 1.79 இலட்சம் 50 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், விவசாய நிலம் உள்ள 8,279 விவசாய குடும்பங்களுக்கு நிதி உதவியாக ₹ 4.97 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**12.** பயிர் உற்பத்தி திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் நெல் சாகுபடி செய்த 9,889 விவசாயிகளுக்கு சொர்ணவாரி, சம்பா மற்றும் நவரை 2023-24 பருவத்திற்கு உற்பத்தி மானியமாக ₹ 7.85 கோடி வழங்கப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் இயற்கை வழி நெல் உற்பத்தி செய்த 96 விவசாயிகளுக்கு ₹ 9.72 இலட்சம் உற்பத்தி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடி செய்த 709 விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ₹ 1.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மணிலா, பயறு வகைகள், சிறுதானியங்கள், பருத்தி மற்றும் எள் சாகுபடி செய்த 2,631 விவசாயிகளுக்கு மானியமாக ₹ 1.03 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**13.** காரைக்கால் பகுதியில் சம்பா, தாளடி, நவரை பருவத்தில் நெல், பயறு வகைகள், எள் மற்றும் பருத்தி பயிர்களை சாகுபடி செய்த 5,838 விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ₹ 5.92 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், ஏனாம் பகுதியில் நெல் சாகுபடி செய்த 282 விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ₹ 21.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் விதை

உற்பத்தியாளர்களுக்கு சான்று விதைகளுக்கான உற்பத்தி மானியமாக 41 விவசாயிகளுக்கு ₹ 8.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பாசன வசதிக்காக பயன்படுத்தும் மின் மோட்டார் பம்புகளுக்கான இலவச மின்சாரத்திற்கு மானியமாக ₹ 17.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**14.** ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின்கீழ், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியை சார்ந்த 1,396 தோட்டக்கலை விவசாயிகள் பயனடையும் வகையில் அறுவடைக்கு பிந்தைய மானியமாக ₹ 63.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியை ஊக்கப்படுத்தும் விதமாக தேசிய தோட்டக்கலை திட்டத்தின்கீழ், 1,829 தோட்டக்கலை விவசாயிகளுக்கு நிதி உதவியாக ₹ 94.03 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, தோட்டக்கலைப் பயிர்களை வளர்க்கும் புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியை சேர்ந்தவர்களுக்கு ₹ 9.90 இலட்சம் மதிப்பிலான 3,592 காய்கறி விதைத் தொகுப்புகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்) திட்டத்தின்கீழ், சிறுதானிய சாகுபடிக்கு உற்பத்தி ஊக்கத்தொகை வழங்குதல், ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல், சந்தை உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், மற்றும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரித்தல் போன்றவற்றிற்காக ₹ 29.55 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**15.** புதுச்சேரி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரமயமாக்கல் துணை திட்டத்தின்கீழ், 37 டிராக்டர்கள், 33 பவர் டில்லர்கள், 3 நெல் நடவு இயந்திரங்கள், மற்றும் பவர் வீடர்கள், ரோடோ வேட்டர்கள், வைக்கோல் கட்டும் இயந்திரங்கள் மற்றும் ட்ரோன்கள் தலா 6 வாங்க ₹ 1.56 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், காரைக்கால் பகுதிக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்க 45 விவசாயிகளுக்கு மானியமாக ₹ 70.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

**16.** கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தரமான கால்நடை சேவைகளை இலவசமாக வழங்கியும், கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**17.** கடந்த ஆண்டு, 3,41,289 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு இலவச சிகிச்சைகள் வழங்கப்பட்டு மேலும், 72,800 கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இது தவிர, புதுச்சேரி மாநிலம் முழுவதும்

64 கால்நடை சிகிச்சை முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நம் விருப்பத்திற்கேற்ப உயர் ரக கலப்பின கால்நடை கன்றுகளை உற்பத்தி செய்ய 45,669 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், 14,939 உயர்ரக மரபு கூற்றைக் கொண்ட கலப்பினக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கால்நடை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பகுதிகளிலும் 34 “கால்நடை கண்காட்சிகள்” நடத்தப்பட்டு சிறந்த கால்நடைகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. கால்நடைகளுக்கான சிகிச்சைகளை கால்நடை விவசாயிகளின் இல்லம் தேடிச் சென்று நேர விரயம் இன்றி சிகிச்சை அளிப்பதற்காக தேசிய கால்நடை நலம் மற்றும் நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ், மேலும் 3 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**18.** இவ்வாட்சிப்பரப்பு பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திட ₹ 10.37 கோடி செலவில் 4,149 கறவை மாடுகள் 50 விழுக்காடு மானியத்தில் கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுத்தமான பால் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு இவ்வாட்சிப்பரப்பில் முதல் முறையாக ₹ 1.23 கோடி செலவில் 294 பால் கறவை இயந்திரங்கள் 100 விழுக்காடு மானியத்தில் கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**19.** கிராமப்புற புறக்கடை கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 11,800 வான் கோழிகள் மற்றும் 4,400 இருவித பயன்பாடுகொண்ட ஆறு வார கிரிராஜா இனக்கோழிகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின்கீழ், ₹ 1.64 கோடி செலவில் 789 டன் தீவனம் 5,266 கறவை மாடுகள் மற்றும் கன்றுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 347 கால்நடைகள் மானியத்துடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. காப்பீடு செய்யப்படாமல் இறந்த 297 கால்நடைகளுக்கு இழப்பீடாக ₹ 17.79 இலட்சம் கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. காரைக்காலில், கால்நடை மருத்துவக் கல்லூரியின் கிளையை நிறுவுவதற்காக ₹ 1.17 கோடி உள்ளடங்களாக புதுச்சேரி, ராஜீவ் காந்தி அரசு கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ₹ 33.99 கோடி உதவிக்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

## கலை மற்றும் பண்பாடு

**20.** மக்களை ஒன்றிணைத்து மற்றும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்கி ஒரு தேசத்தின் அடையாளமாக கலை மற்றும் பண்பாடு திகழ்கிறது.

**21.** ஸ்ரீ அரபிந்தோ அவர்களின் 150வது பிறந்த நாளை நினைவூட்டும் வகையில் "அரபிந்தோவின் புத்தகப் பிரிவு" ரோமன்ரோலண்ட் நூலகத்திலும் மற்றும் இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து பிராந்தியங்களில் உள்ள 77 அரசு கிளை நூலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இதில் பிரத்தியேகமாக அரபிந்தோ தொடர்பான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி பாக்கமுடையான்பேட்டையில் உள்ள அரசு கிளை நூலகம் ₹ 13.45 இலட்சம் மதிப்பீட்டில் மின்-நூலகமாக (Digital Library) மாற்றப்பட்டுள்ளது. இது இவ்வாட்சிப்பரப்பின் முதல் மின்-நூலகமாகும்.

**22.** பாரதியார் பல்கலைக்கூடத்தில் 2023-24ஆம் கல்வியாண்டிலிருந்து நடனம் மற்றும் இசையில் முதுகலையும் மற்றும் நுண்கலையில் முதுகலை படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**23.** இலக்கியம், இசை, நாடகம், நடனம், நாட்டுபுறக் கலைகள் மற்றும் நுண்கலைகள்/சிற்பம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய 216 கலைஞர்கள்/அறிஞர்களுக்கு 2013 முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான "புதுவை கலைமாமணி" விருதுகளுடன், தலா ₹ 50,000 ரொக்கப் பரிசாக மொத்தம் ₹ 1.08 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கியத்துறையில் சிறந்து விளங்கிய 93 அறிஞர்களுக்கு 2022ஆம் ஆண்டு வரையிலான கம்பன் புகழ்

இலக்கிய விருதுகள், நேரு குழந்தைகள் இலக்கிய விருதுகள் மற்றும் தொல்காப்பியர் விருதுகள் ₹ 10,000 ரொக்கப் பரிசுடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு, 177 நலிவுற்ற கலைஞர்கள், 4 தமிழ் அறிஞர்கள் மற்றும் 135 கலைமாமணி/தமிழ்மாமணி/ தெலுங்கு ரத்னா/மலையாள ரத்னா விருதுகளைப் பெற்றவர்களுக்கு மாதாந்திர நிதி உதவியாக மொத்தம் ₹ 97 இலட்சம் வழங்கியுள்ளது.

**24.** நமது தேசம் முழுவதிலிருந்தும் வந்திருந்த 1,250 கலைஞர்கள் பங்கேற்புடன் பெரும் விழாவான "புதுச்சேரி கலைவிழா" புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வெகு சிறப்பாக கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டது. சுதந்திரத் திருவிழா அமுதப் பெருவிழா நிகழ்வின்கீழ், மாகி கலாச்சார விழா/ஓவியர் முகாம் 2023 மற்றும் அட்டவணை இன மக்கள் வசிக்கும் பகுதிகளில் நடைபெற்ற கிராமப்புற கலாச்சார விழா முறையே 750-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் மற்றும் 32 அட்டவணை இன கலாச்சாரக் குழுக்கள் பங்கேற்புடன் அவர்களின் கலாச்சார உணர்வு மற்றும் திறமையை வெளிப்படுத்தும் விதமாக நடத்தப்பட்டது.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**25.** தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கான பொது விநியோகத் திட்டத்தின்கீழ், உணவு தானியங்களுக்கு பதிலாக நேரடிப் பணப் பயன் பரிமாற்றத்தை இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப்

பகுதிகளிலும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது மற்றும் உணவு தானியங்களுக்கு ஈடான தொகையை பயனாளிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில், மத்திய அரசின் அந்தியோதயா அன்ன யோஜனா (ஏழைகளுக்கான உணவு திட்டம்) மற்றும் முன்னுரிமை குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களான 1.91 இலட்சம் அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ₹ 15 கோடி செலவு செய்துள்ளது.

**26.** புதுச்சேரி அரசு செயல்படுத்தி வரும் இலவச அரிசி திட்டத்தின் கீழ், ₹ 219 கோடி செலவு செய்யப்பட்டு 3.37 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். சென்ற ஆண்டு, தீபாவளி பண்டிகையையொட்டி இலவச அரிசி மற்றும் சர்க்கரைக்கு ஈடாக ₹ 490 பண உதவியாக 3.37 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயன்பெறும் பொருட்டு ₹ 16.51 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ஈடாக ₹ 750 வீதம் 3.37 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் ₹ 25.27 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**27.** இவ்வாட்சிப்பரப்பில் முதலமைச்சரின் எரி வாயு மானிய திட்டம் என்னும் முன்னோடி திட்டமானது கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் வெற்றிகரமாக துவங்கப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம் “வறுமைக்கோட்டிற்குகீழ் இருக்கும் அனைத்து குடும்ப அட்டைதாரர்கள்” மற்றும் “அந்தியோதயா அன்ன யோஜனா” குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு சிலிண்டருக்கு ₹ 300-ம் மற்றும் “வறுமைக்கோட்டிற்கு மேல் இருக்கும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு” ஒரு சிலிண்டருக்கு ₹ 150-ம் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடிப் பணப் பயன் பரிமாற்ற முறையில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதற்காக, ₹ 21.50 கோடி செலவு செய்யப்பட்டு 1.75 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**கூட்டுறவு**

**28.** புதுச்சேரி மாநிலத்தில் வசிப்பவர்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்த அரசு புதுவை மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம் வட்டி தள்ளுபடி தொகையாக ₹ 71.78 இலட்சத்தையும் மற்றும் வட்டி மானியமாக ₹ 25 இலட்சத்தையும் முறையே 389 பிற்படுத்தப்பட்ட மற்றும் பொதுப் பிரிவு உறுப்பினர்களுக்கும் மற்றும் 72 ஆதிதிராவிடர் பிரிவு உறுப்பினர்களுக்கும் வழங்கியுள்ளது. நலிந்த பிரிவு மக்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு வீட்டு வசதி இணையத்தின்கீழ், 555 உறுப்பினர்களின் அபராத வட்டி மற்றும் இறுதி தவணை தொகையான ₹ 1.68 கோடியை தள்ளுபடி

செய்துள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் இயங்கி வரும் பாண்டெக்ஸ், பாண்ஃபேப் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மானியக் கொடையாக ₹ 49.59 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், கடந்த ஆண்டு 184 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**29.** விவசாயிகளின் நலனுக்காக இந்த அரசு டிராக்டர் வாடகை கட்டணமான ₹ 1.16 கோடி மற்றும் ₹ 13.80 இலட்சத்தை முறையே 9,082 பிற்படுத்தப்பட்ட மற்றும் பொதுப் பிரிவு விவசாயிகளுக்கும் மற்றும் 1,097 ஆதிதிராவிடர் பிரிவு விவசாயிகளுக்கும் திருப்பிச் செலுத்தியுள்ளது. மேலும், 7,940 விவசாயிகள் பெற்ற விவசாயக் கடனின் கடைசித் தவணை தொகையான ₹ 97 இலட்சத்தையும் தள்ளுபடி செய்துள்ளது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் 1,504 ஆதிதிராவிடர் பிரிவு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 8,612 உறுப்பினர்களுக்கு நேரடிப் பணப் பயன் பரிமாற்ற முறையில் கால்நடைத் தீவன மானியமாக ₹ 5.29 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**30.** அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தொழில்முறை மின்னணு சூழலில் செயல்படும் வகையில் கடந்த ஆண்டு அனைத்து அமைப்புகளும் மின்னணு மயமாக்கப்பட்டு தேசிய மின்னணு கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இது தவிர, அனைத்து தொடக்க வேளாண்மை

கூட்டுறவு கடன் சங்கங்கள் பல்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றப்பட்டு அவற்றை மேலும் வலுப்படுத்த மத்திய அரசின் பல புதிய திட்டங்களான, ஒரே மாதிரியான துணை-விதிகளை பின்பற்றுவது, பொது சேவை மையங்களை தொடங்குவது, பிரதம மந்திரி மலிவு விலை மருந்தகங்கள் (PMJAK) திறப்பது, பிரதம மந்திரி விவசாய உரக்கடைகள் (PMKSK) திறப்பது மற்றும் தேசிய கூட்டுறவு விதை வழங்கும் சங்கம், தேசிய கூட்டுறவு இயற்கை விவசாய சங்கம், மற்றும் தேசிய கூட்டுறவு ஏற்றுமதி சங்கம் ஆகியவற்றில் கூட்டுறவு சங்கங்களை உறுப்பினராக்கி அவற்றின் சேவைகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மின்விசை**

**31.** அரசிடமிருக்கும் உபரி மின்சாரத்தை விற்பனை செய்வதற்காக பவர் டிரேடிங் கார்ப்பரேஷனுடன் புதுச்சேரி அரசு ஒப்பந்தமிட்டு, 27-4-2023 முதல் மின் வர்த்தகம் தொடங்கி நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு, 550 மில்லியன் யூனிட் உபரி மின்சாரம் விற்பனை செய்யப்பட்டு ₹ 261.20 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**32.** புதுச்சேரியில் வசிப்பவர்கள் தங்களுடைய குடியிருப்புக் கட்டிடத்தின் மேல் தளத்தில் 1 கிலோவாட் முதல் 500 கிலோவாட் வரையிலான சூரிய மின் உற்பத்தி பேனல்களை அமைத்து மின் உற்பத்தி செய்து சொந்த உபயோகத்திற்குப் போக மீதமுள்ள மின்சாரத்தை மின் துறையிடம் விற்பனை செய்ய முடியும். சென்ற ஆண்டு, 443 வீடுகளில் 2.27 மெகாவாட், 39 அரசு கட்டிடங்களில் 5.47 மெகாவாட் மற்றும் 178 பல்வேறு மின் நுகர்வோர்கள் நிறுவிய 41.11 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் சக்தி பேனல்கள் என மொத்தம் 48.85 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் சக்தி பேனல்கள் கட்டிடங்களின் மேல் தளங்களில் அமைக்கப்பட்டு அவை பகிர்மான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. மின் அமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ், வில்லியனூர் மற்றும் பாகூர் 230/110KV தானியங்கி துணை மின்நிலையங்களில் புனரமைத்தல் மற்றும் நவீன மயமாக்கும் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

**33.** கடந்த ஆண்டு, 76 புதிய பகிர்மான மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு அதன் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. 101 கிலோ மீட்டர் உயர் மின் அழுத்தப் பாதைகளும் மற்றும் குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 8 உயர் மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 30 குறைந்த மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 9,289 வீடுகளுக்கும், 1,808 வர்த்தக

நிறுவனங்களுக்கும், 169 வேளாண் பம்பு செட்டுகளுக்கும் மற்றும் 5,222 LED தெரு மின் விளக்குகளுக்கும், மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2,579 பழுதான மின் அளவிகள், இயல் ஆற்றல் மின் அளவிகளாக மாற்றப்பட்டுள்ளன. புதை மின் வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 361 குறைந்த மின் அழுத்த மேல்நிலை மின் இணைப்புகள் புதைமின்வட அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

## மீன் வளம் மற்றும் மீனவர் நலம்

**34.** மீன் வளத்துறையானது வளர்ந்து வரும் ஒரு துறையாகும். இது மீனவர்கள், மீன் வளர்ப்பு விவசாயிகள் மற்றும் மீன் விற்பனையாளர்களுக்கு வேலைவாய்ப்பை மற்றும் வாழ்வாதாரத்தினை வழங்கி அவர்களது பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**35.** புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் 61 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக 18,562 மீனவக் குடும்பங்களுக்கு தலா ₹ 6,500 வீதம் ₹ 12.06 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதே போல், மழைக்கால நிவாரணமாக மீனவக் குடும்பம் ஒன்றிற்கு ₹ 3,000 வீதம் 18,636 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 5.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. வலை இழப்பு, படகுகள் சேதம், உயிர்ச் சேதம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியை சார்ந்த 504 மீனவர்களுக்கு நிதி உதவியாக ₹ 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த 9,202 முதியோர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக மொத்தம் ₹ 29.77 கோடி வழங்கப்பட்டுள்ளது. இறந்த மீனவ முதியோர் ஓய்வூதியதாரர்களின் 82 வாரிசுகளிடம் இறுதி சடங்கு நிதியாக தலா ₹ 15,000 வழங்கப்பட்டுள்ளது.

**36.** சென்ற ஆண்டு, இவ்வாட்சிப்பரப்பில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு டீசல் மானியம் லிட்டருக்கு ₹ 12 வழங்கப்பட்டது. அதன்படி, 507 பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு டீசல் மானியமாக ₹ 11.51 கோடி வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட இரும்பு மற்றும் மரத்திலான விசைப் படகுகளுக்கான பராமரிப்பு செலவு ₹ 20,000-லிருந்து ₹ 30,000-ஆகவும் மற்றும் கண்ணாடி நுண்ணிழை படகுகளுக்கு ₹ 10,000-லிருந்து ₹ 20,000-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 412 பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு பராமரிப்பு செலவுக்காக ₹ 1.18 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**37.** மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு 60 விழுக்காடு மானியமாக ₹ 2.03 கோடி மீனவர் கூட்டுறவு சங்கத்தின்

2,738 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வருடாந்திரக் காப்பீட்டுச் சந்தா தொகையில் 90 விழுக்காடு மானியமாக ₹ 11.65 இலட்சம் பதிவு பெற்ற 212 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு தங்களின் விசைப்படகை காப்பீடு செய்வதற்காக கடந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இயந்திரம் பொருத்தாத படகுகள் வலையுடன் சேர்த்து வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக 44 மீனவப் பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 18.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு ஊக்குவிப்பு திட்டங்களின்கீழ், இடுபொருள் மானியமாக ₹ 27.98 இலட்சமும் மற்றும் ₹ 5.31 இலட்சமும் முறையே 244 மற்றும் 21 மீனவ விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**38.** கொச்சின் மற்றும் சென்னையில் அமைந்துள்ள மத்திய மீன்வள நிறுவனமான கடல் மற்றும் பொறியியல் பயிற்சி மையத்தில் இரண்டு ஆண்டுகள் டிப்ளமோ படிப்பில் சேர்ந்து மீன்பிடிக்கலன் மாலுமி மற்றும் கடல்சார் பொருத்துனர் படிப்புகளில் பயிற்சிகள் பெற மீனவக் குடும்பத்தைச் சார்ந்த 7 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதைப் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**39.** பாரதப் பிரதமரின் மத்ஸ்ய சம்பதா யோஜனா (பிரதம மந்திரியின் மீன்வள திட்டம்) திட்டத்தின்கீழ், 24,786 மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்கால மற்றும் மழைக்கால நிவாரண உதவியாக

₹ 7.44 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கூறுகளான விபத்து காப்பீடு திட்டம், ஐஸ் பெட்டியுடன் கூடிய மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம், குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களுக்காக 18 மீனவர்கள் பயனடையும் வகையில் மொத்தம் ₹ 1.02 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்கள், மீன் விற்பனையாளர்கள் மற்றும் மீன்பிடி சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் மூலதனத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ₹ 39.80 கோடி மதிப்பிலான 2,862 கிசான் கடன் அட்டைகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நல்லவாடு மற்றும் பெரிய காலாப்பட்டில் மீன்பிடி இறங்குதள மையத்திற்கான மேம்பாட்டு பணிகள் மற்றும் தேங்காய்திட்டில் மீன்பிடி துறைமுக விரிவாக்கம்/கட்டுமானம் தொடங்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது, இதற்கான திட்ட செலவு ₹ 92.47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

**40.** நமது நாட்டில் உள்ள 34 மாநில குறிப்பு ஆய்வகங்கள் மற்றும் 56 தொற்று உயிரின வளர்ப்பு மற்றும் மருந்துகளினால் அவற்றிற்கு ஏற்படும் பாதிப்பினை பரிசோதனை செய்யும் ஆய்வகங்களுக்கிடையில் புதுச்சேரி மார்பு நோய்களுக்கான அரசு மருத்துவமனையில் உள்ள இடைநிலை குறிப்பு ஆய்வகம்,

“உள்கட்டமைப்பு மற்றும் தரமான சேவைகள்” வழங்கும் தரவரிசையில் முதல் இடத்தையும் மற்றும் காசநோய் ஆய்வகங்களில் 5 நட்சத்திர அந்தஸ்தைப் பெற்ற ஒரே ஆய்வகம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மூலம் காசநோயை கண்டறியும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளை சரிபார்ப்பதற்கான நோய்கண்டறிதல் “சரிபார்ப்பு மையங்களில்” ஒன்றாக இந்த இடைநிலை குறிப்பு ஆய்வகம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**41.** புதுச்சேரி பகுதியில் உள்ள தேங்காய்திட்டு மற்றும் ஆண்டியார்பாளையத்தில் இருக்கும் துணை-சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாடுகளின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக ₹ 16.11 இலட்சம் செலவில் 28 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், அரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு, முத்திரைப்பாளையம், மண்ணாடிப்பட்டு, திருக்கனூர், பாகூர் மற்றும் அரியாங்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதியதாக 5 மருத்துவ அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

**42.** இரத்தம் இழப்பு இல்லாமல் அதிர்வு அலைகள் மூலம் அறுவை சிகிச்சை செய்யும் கருவியும், மேலும் 3 டயாலிசிஸ் இயந்திரமும், மூலக்கூறு வைராலஜி ஆய்வகம் அமைப்பதற்கான கருவிகளும், டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களுக்கான சோதனைகளை ஒரே நேரத்தில் மேற்கொள்வதற்கான தானியங்கி எலிசா செயலாக்க கருவியும் மற்றும் பல் நுண்ணோக்கி கருவியும் இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்திற்காக வாங்கப்பட்டுள்ளன.

**43.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் இருக்கும் இருதய அறுவை சிகிச்சை ஆய்வகம் அதி நவீன கருவிகளுடன் கூடிய அறுவை சிகிச்சை ஆய்வகமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, இலவச மருத்துவ சிகிச்சை வழங்குதலின்கீழ், 67 இருதய அறுவை சிகிச்சைகளும் மற்றும் 12 இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**44.** கொலோனோஸ் கோபிக் சேவைகள் உள்ளடங்கிய சுமார் 1,565 எண்டோஸ்கோபிக் சிகிச்சைகள், 90 முதுகெலும்பு அறுவை சிகிச்சைகள், 60 கண்பார்வை மீட்டெடுக்கும் சிகிச்சைகள், மற்றும் 3 கருவிழி மாற்று அறுவை சிகிச்சைகள், இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் ஏழை நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**45.** சென்ற ஆண்டு, நமது ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து பிராந்திய அரசு மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு சாரா நிறுவன மருத்துவமனைகளில் 23,550 கண்புரை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரிவான கண்பார்வை பரிசோதனை திட்டத்தின்கீழ், 2,731 இலவச கண்ணாடிகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. காது, மூக்கு, தொண்டை, செவிப்புலன் இயங்குமுறை மறுசீரமைப்பின்கீழ், காது, மூக்கு, தொண்டைக்கான 2,003 பெரிய மற்றும் 6,721 சிறிய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**46.** குழந்தைகளின் ஆரோக்கியத்தை பரிசோதித்து (பிறப்பு முதல் 18 வயது வரை) ஆரம்பகால நோய் அடையாளங்களைக் கண்டறிந்து, ஆரம்பகால சிகிச்சை சேவைகள் முதல் உயர்நிலை சிகிச்சை சேவைகள் வரை அளிக்கும் ஒரு புதுமையான மற்றும் இலட்சிய திட்டம் ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம் (தேசிய குழந்தைகள் நலத் திட்டம்) திட்டமாகும், இத்திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு, 2,40,000 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு, அதில் 218 குழந்தைகள் பிறவி இருதய நோய் உடையவர்களாக அடையாளம் காணப்பட்டனர், அவர்களில் 51 குழந்தைகளுக்கு உயர் இருதய அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் செவித்திறன் குறைபாடு

உள்ளதா என பரிசோதிக்கப்பட்டது. அதில், பிறவியிலேயே காது கேளாமல் உள்ள மூன்று குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அக்குழந்தைகளுக்கு காக்லியர் இம்பிலான்ட் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இது தவிர, 855 அங்கன்வாடிகளைச் சேர்ந்த குழந்தைகளும், 456 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் பரிசோதிக்கப்பட்டனர்.

**47.** கோவிட் தடுப்பூசிக்காக COWIN இணைய முகப்பு துவங்கப்பட்டது போல், வழக்கமான நோய்தடுப்பூசிக்கான U-WIN இணைய முகப்பு நமது ஆட்சிப்பரப்பில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்டது. இதில் பயனாளிகள் முன்-பதிவு செய்துகொண்டு தங்களின் கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தி நாட்டின் எந்தப் பகுதியிலும் தடுப்பூசியினை போட்டுக் கொள்ளலாம். இந்த U-WIN இணைய முகப்பு வாயிலாக தடுப்பூசி போட்டுக்கொண்ட பயனாளிகள் தங்களின் மின்னணு-சான்றிதழையும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆயுஷ்**

**48.** தென்னிந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டு, பாராம்பரிய முறையில் நோய்களை குணப்படுத்தக் கூடிய சித்த மருத்துவமானது இந்தியாவின் பழமை வாய்ந்த மருத்துவ முறைகளில் ஒன்றாகக்

கருதப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மருத்துவ தாவரங்கள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு மருத்துவ தாவரங்கள் பற்றிய தேசிய மாநாடு மாகியில் நடத்தப்பட்டது. புதுச்சேரி, காமராஜர் மணிமண்டபத்தில் மூன்று நாட்களுக்கு ஹோமியோபதி பரிசோதனை முகாம் நடைபெற்றது. வில்லியனூரில் ஆயுஷ் ஒருங்கிணைந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு அதில் ஹோமியோபதி சிகிச்சைக்கான புற நோயாளிகள் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதேபோல், இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் யோகா பிரிவு ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

## உயர் மற்றும் தொழில் நுட்பக்கல்வி

**49.** உயர் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நாட்டின் வளர்ச்சியில் மட்டும் முக்கிய பங்காற்றுவது மட்டுமின்றி சவால்களை எதிர்கொள்ளும் விதமாக தனி மனிதனின் திறமையையும் வளர்க்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர்.

**50.** ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் (தேசிய உயர் கல்வித் திட்டம்) திட்டத்தின்கீழ், காலாப்பட்டில் உள்ள புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கல்வி வளாகம் கட்ட ₹ 8 கோடியும் மற்றும்

புதுச்சேரியிலுள்ள காஞ்சி மாமுனிவர் முதுகலைப் பட்டப்படிப்பு மையத்தில் மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ₹ 1.44 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

**51.** உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை மாணவர்கள் தொடர்வதை ஊக்கப்படுத்தும் விதமாக பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின்கீழ், சென்டாக் (CENTAC) மூலம் சேரும் மாணவர்களுக்கு இந்த அரசு தொடர்ந்து நிதி உதவியை அளித்து வருகிறது. அதன் அடிப்படையில், 600 மருத்துவக்கல்வி மாணவர்கள், 4,980 பொறியியல் கல்வி மாணவர்கள் மற்றும் 596 செவிலியர் கல்வி மாணவர்கள் அடங்கலாக மொத்தம் 6,176 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ₹ 26.42 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## இந்து அறநிலையத் துறை

**52.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள 210 நலிவுற்ற திருக்கோயில்களில் "ஒரு கால பூஜை" செய்வதற்காக ₹ 42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள 12 திருக்கோயில்கள் மற்றும் கட்டுப்பாட்டில் வராத 37 திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணிகள் உட்பட புதுச்சேரி பகுதிகளில் உள்ள 22 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழா செய்திட மானியக்கொடையாக ₹ 2.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பகுதியில் உள்ள 8 திருக்கோயில்களிலும், காரைக்கால் பகுதியில் உள்ள 2 திருக்கோயில்களிலும் அன்னதானத் திட்டம் சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. புதுச்சேரியில் உள்ள அருள்மிகு மணக்குள விநாயகர் திருக்கோயில் மற்றும் காரைக்காலில் உள்ள ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் முன்பதிவு மற்றும் வழிபாட்டிற்கான இணைய வழி சேவைகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, 571 சிறுபான்மையின இஸ்லாமிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ₹ 15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**53.** இந்த அரசு, கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுப்பது மட்டுமல்லாமல், ஆக்கிரமிப்பாளர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## தொழில்கள்

**54.** தொழில்துறை, வேலைவாய்ப்பை வழங்குவதில் முக்கிய பங்காற்றுவதுடன், அமைப்புசார் துறையில் ஒரு மிகப்பெரும் சக்தியாகவும் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த அரசு, புதுச்சேரி மாநிலத்தை தொழில்துறை மையமாக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

**55.** தொழிற்பயிற்சி திட்டத்தின்கீழ், உதவித் தொகையுடன் கூடிய தொழிற்பயிற்சி, மேம்பட்ட மற்றும் உயர் தொழில்நுட்ப பயிற்சிகள், 51 படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிய குழுக்களுக்கு இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு இதில் 200 நபர்கள் பயிற்சி பெறுகின்றனர். தொழிற்பயிற்சி பெறும் நபர்களுக்கு மாதம் ₹ 4,500, ₹ 7,500 மற்றும் ₹ 9,000 என்ற உயர்த்தப்பட்ட உதவித் தொகையுடன் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதற்காக, ₹ 49.90 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**56.** கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 291 வேலையில்லா கிராமப்புற இளைஞர்களுக்கு ₹ 4,500 என்ற உயர்த்தப்பட்ட உதவித் தொகையுடன் கூடிய கைவினைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன மற்றும் புதிய குழுவில் 100 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, மொத்தம் ₹ 1.12 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், தென்னை நார் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ₹ 36.58 இலட்சம் ஊக்கத் தொகையுடன் கூடிய கயிறு திரித்தல் மற்றும் கயிறு மிதியடி தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் 182 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**57.** வேலையில்லா இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு வங்கிகள் மூலம் 238 தொழில் முனைவோர்கள் சுய தொழில் தொடங்க ₹ 61.68 இலட்சம் மானியத்துடன் ₹ 1.50 கோடி வங்கிக் கடன்

வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர்களை உருவாக்கும் விதமாக 26 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 80.55 இலட்சம் மானியத்துடன் ₹ 2.38 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**58.** பாரதப் பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள 901 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உணவு பதப்படுத்தும் சிறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க மூலதன உதவியாக ₹ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, 54 குறு நிறுவனங்களுக்கு 35 விழுக்காடு மானியத் தொகையுடன் பல்வேறு வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குறுந்தொழில்கள் தொடங்க 120 பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**59.** தொழில் வழிகாட்டு குழுமத்தின் மூலம் நமது ஆட்சிப்பரப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க பல்வேறு தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்பட்ட 80 விண்ணப்பங்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அதில் 16 விண்ணப்பங்களுக்கு சம்பந்தப்பட்ட துறைகள் அனுமதி அளித்து, ₹ 766.45 கோடி முதலீட்டில் 4,627 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**60.** தொழில் முனைவோர் தொழில் தொடங்க ஊக்கமளித்தல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் 21 நிறுவனங்களுக்கு ₹ 7.13 கோடியும் மற்றும் காரைக்கால் பகுதியில் 4 நிறுவனங்களுக்கு ₹ 1.65 கோடியும், மூலதன முதலீட்டு மானியமாக வழங்க மாநில அளவிலான குழு ஒப்புதல் அளித்துள்ளது. புதுச்சேரி நகர எரிவாயு விநியோக கொள்கை 2023 அறிவிக்கப்பட்டுள்ளது. இது காரைக்கால் பகுதியில் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. இதேபோல், குறைந்த செலவில் தரமான பலவகையிலான தளவாட பூங்கா, கிடங்கு மற்றும் சில்லறை வணிகம் சார்ந்த உள்கட்டமைப்பை உருவாக்கவும், புதுச்சேரியின் தளவாடச் சூழலை உலகளாவிய விநியோகக் கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கும் குறிக்கோளுடனும் "புதுச்சேரி ஒருங்கிணைந்த தளவாட உள்கட்டமைப்பு பலவகை தளவாட பூங்கா மற்றும் கிடங்கு கொள்கை 2023" என்ற தளவாடக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில் நுட்பம்

**61.** தகவல் தொழில் நுட்பம் ஒரு மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டில் மட்டும் பங்காற்றாமல் நிர்வாகத்தை கூடுதல் பொறுப்புமிக்கதாகவும் மற்றும் திறன்மிக்கதாகவும் செய்துள்ளது.

இவ்வாட்சிப்பரப்பில், ₹ 5.12 கோடி திட்ட மதிப்பீட்டில் இணைய பயன்பாட்டு மின்-அலுவலகம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொது மக்களின் வசதிக்காகவும் மற்றும் அரசு சேவைகள் பெறுவதை எளிதாக்கும் வகையிலும் மின்னணு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அரசு துறைகளால் வழங்கப்படும் சான்றிதழ்களின் உயர் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை, கண்டறியும்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் திருமணச் சான்றிதழ், பட்டா மற்றும் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை போன்ற சேவைகளை சோதனை அடிப்படையில் வழங்குவதற்காக "பிளாக் செயின் தொழில்நுட்பம்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 23 சேவைகளுக்கான "பிளாக் செயின் தொழில்நுட்பத்தை" ஒருங்கிணைக்கும் பணிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

**62.** அனைத்து அரசு நலத்திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனாளிகளைத் தானாகவே கண்டறிந்து அவர்களுக்கு அத்திட்டங்களின் பயன்களைத் திறம்பட வழங்குவதை உறுதிப்படுத்தும் ஒரு முயற்சியாக, இவ்வாட்சிப்பரப்பில் ஒருங்கிணைந்த தரவு முனையத் திட்டத்தை இந்த அரசு வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு, 22 துறைகளின் 147

நலத்திட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், உரிய நேரத்தில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பொதுமக்களை சென்றடைய இந்த ஒருங்கிணைந்த தரவு முனையம் வழிவகை செய்கிறது.

## தொழிலாளர் நலம்

**63.** தொழிலாளர்கள் பணிபுரியும் சூழலை மேம்படுத்தி அவர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்குவதும், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதுமே தொழிலாளர் நலன் ஆகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில், இந்த அரசு தொழிலாளர்களின் நலத்தை மேம்படுத்துவதற்காக தொடர்ந்து நிதி உதவிகளை வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**64.** புதுச்சேரி அமைப்பு-சாரா தொழிலாளர் நலச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 25,828 தொழிலாளர்களுக்கு தீபாவளி ரொக்கப் பரிசாக மொத்தம் ₹ 2.58 கோடி நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், புதுச்சேரி கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் 41,427 உறுப்பினர்களுக்கு பல்வேறு நலப் பயன்களான திருமண உதவி, மகப்பேறு உதவி, மருத்துவ உதவி, ஈமச் சடங்கு உதவி, இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவி போன்றவற்றிற்காக

₹ 35.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தீபாவளி ரொக்கப் பரிசு ₹ 3,500-லிருந்து ₹ 4,000-ஆக உயர்த்தப்பட்டு 44,558 பயனாளிகளுக்கு ₹ 17.89 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**65.** அரசு மற்றும் தனியார் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களுக்கான சேர்க்கை இணையவழி மூலம் கடந்த ஆண்டு நடத்தப்பட்டதன் வாயிலாக 1,107 தொழிற்பயிற்சி பெறுபவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், அரசு தொழில்துறை பயிற்சி நிறுவனங்களில் தொழிற்பயிற்சியில் சேர்வதை ஊக்கப்படுத்தும் விதமாக இந்த அரசு அவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை மற்றும் தகுதி உதவித் தொகையை ₹ 150-லிருந்து ₹ 1,000-ஆகவும் மற்றும் ₹ 300-லிருந்து ₹ 1,000-ஆகவும் உயர்த்தியுள்ளது.

**66.** சென்ற ஆண்டு, தொழில்நெறி வழி காட்டுதல் கண்காட்சி நடைபெற்றது. இதில், புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு பகுதிகளிலிருந்து மொத்தம் 22 கல்லூரிகள் பங்கேற்றன. இதனை பார்வையிட வந்த 4,376 மாணவர்களில் 45 மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளில் உடனடி சேர்க்கை பெற்றனர்.

**67.** அரசு மூலம் மேல்நிலை எழுத்தர் பதவிக்கான மூன்று மாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில், பயிற்சி பெற்ற 200 ஆர்வலர்களில் 42 நபர்கள் பல்வேறு அரசுப் போட்டித் தேர்வுகள் மூலம் அரசு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**உள்ளாட்சி**

**68.** குடிநீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற அடிப்படை சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி இவ்வாட்சிப்பரப்பின் நகர உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான அதிக முக்கியத்துவத்தை இந்த அரசு அளித்து வருகிறது.

**69.** திடக்கழிவு மேலாண்மை பணிகளின்கீழ், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-க்கு இணங்க, புதுச்சேரியில் உள்ள குரும்பாபேட்டை மற்றும் காரைக்காலில் உள்ள பரவைபேட்டை குப்பை கொட்டும் கிடங்கிலிருந்து மரபுவழி கழிவுகளை அகற்றும் பணிகள் முறையே ₹ 42.60 கோடி மற்றும் ₹ 4.28 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**70.** கொம்பாக்கத்தில் உள்ள வீரன்குளம் மற்றும் கருவடிக்குப்பத்தில் உள்ள பிள்ளையார் கோயில் குளத்தின் மேம்பாட்டுப் பணிகளும் இதேபோல், முத்திரையர்பாளையத்தில் உள்ள ஆயிகுளத்தின் புனரமைப்பு பணிகளும் ₹ 2.63 கோடி மதிப்பீட்டு செலவில் முடிக்கப்பட்டுள்ளன. தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ், சுய உதவிக் குழுக்கள் தொடங்குவதை

ஊக்கப்படுத்தும் விதமாக 115 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் தலா ₹ 10,000 வழங்கப்பட்டுள்ளது.

**71.** பொலிவுறு நகரத்திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதிகளில் கட்டப்பட்ட வாய்க்கால்கள், பாரம்பரிய வ.உ.சி. பள்ளி கட்டிடத்தை புனரமைத்தல், தெரு விளக்குகளை LED விளக்குகளாக நிறுவுதல், ரயில்வே பாலம் கட்டுமானம், அண்ணா நகர் மேட்டுவாய்க்கால் பாலம் கட்டுமானம், சிவகாமி நகர் மேட்டுவாய்க்காலில் வாய்க்கால் கட்டுமானம், உழந்தையில் உபரி நீர் வடிகால் வாய்க்கால் கட்டுமானம், மேட்டுவாய்க்கால் மற்றும் பள்ளவாய்க்கால் இணைப்பு பாலம் கட்டுமானம், முத்தியால்பேட்டை மற்றும் தேங்காய்திட்டில் வாய்க்கால் கட்டுமானம் போன்ற பணிகள் ₹ 42.87 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**72.** பாரதப் பிரதமரின் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கான ஆதரவு திட்டத்தின்கீழ், 3,461 பயனாளிகளுக்கு ₹ 10,000 வீதமும், 943 பயனாளிகளுக்கு ₹ 20,000 வீதமும், 228 பயனாளிகளுக்கு ₹ 50,000 வீதமும், ஆக மொத்தம் ₹ 6.48 கோடி செயல்பாட்டு மூலதனமாக பல்வேறு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

## காவல்

**73.** இவ்வாட்சிப்பரப்பில் காவல் துறையை மேலும் வலுப்படுத்தவும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் 250 காவலர்கள் பணியமர்த்தப்பட்டு, 85 ஊர்க்காவல் படையினர் காவலர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், பல்வேறு பணி நிலைகளில் இருக்கும் 121 காவல்துறை அதிகாரிகளுக்கு கடந்த ஆண்டு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. காவல் நிலையங்களில் வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டும் விதமாக 60 காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்கள் மற்றும் 4 கட்டுப்பாட்டு அறைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. காவல்துறை திறம்பட செயல்படுவதற்காக அலுவலக மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் ₹ 2.27 கோடி செலவிலும் மற்றும் இவ்வாட்சிப்பரப்பின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக கலவர தடுப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ₹ 1.43 கோடி செலவிலும் வாங்கப்பட்டுள்ளன. மேலும், காவல்துறை கட்டிடங்களின் சீரமைப்பு மற்றும் பராமரிப்பிற்காக ₹ 3.47 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

## துறைமுகம்

**74.** கடந்த ஆண்டு, காரைக்கால் துறைமுகம் 12.28 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு ₹ 16.81 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. இதேபோல், காரைக்காலில் இயங்கி வரும்

சுய பயன்பாட்டுக் கடல் முனைய வசதி 24,255 டன் திரவ சரக்குகளைக் கையாண்டதன் வாயிலாக ₹ 29.60 இலட்சம் வருவாயை ஈட்டியுள்ளது. மேலும், புதுச்சேரி துறைமுகத்திற்கும், சென்னை துறைமுகத்திற்கும் இடையே 2023-24ஆம் ஆண்டில் சரக்கு போக்குவரத்து தொடங்கப்பட்டதன் காரணமாக சரக்குப் பெட்டக கலன் இதுவரை 9 முறை வந்து சென்றுள்ளது. இதன் மூலம், 242 சரக்குப் பெட்டகங்கள் கையாளப்பட்டுள்ளன. மீன்பிடி மற்றும் சரக்கு கலன்களின் தடையற்ற இயக்கத்திற்காக, ₹ 9.23 கோடி செலவில் தூர்வாரும் மற்றும் மண் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பொதுப்பணிகள்**

**75.** உள்கட்டமைப்பில் முதலீடு பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். உற்பத்தி வளர்ச்சி மற்றும் சந்தை மேம்பாட்டுக்கு திறமையான உள்கட்டமைப்பு இன்றியமையாததாகும். எனவே, உள்கட்டமைப்புக்கு இந்த அரசு எப்போதுமே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**76.** கடந்த நிதி ஆண்டு, வில்லியனூரில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை ₹ 9 கோடி மதிப்பீட்டு செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில்

16 சாலைகள் மற்றும் மாகி பகுதியில் 7 சாலைகளுக்கான மேம்பாட்டுப் பணிகள் முறையே ₹ 50.62 கோடி மற்றும் ₹ 5.48 கோடி மதிப்பீட்டு செலவில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. இதேபோல், பேரத்திற்குட்பட்ட கடனின்கீழ், காரைக்கால் பகுதியில் மூன்று சாலை மேம்பாட்டுப் பணியும் மற்றும் ஒரு சாலை மறுசீரமைப்புப் பணியும் ₹ 23.63 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**77.** குடிநீர் வழங்கல் விரிவாக்கம் மற்றும் அதிகரித்தல் திட்டத்தின்கீழ், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுமானம், கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல், குடிநீர் வழங்கல், நீர் உந்துதல், சாலை மறுசீரமைப்பு மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் புதுச்சேரியில் உள்ள 8 இடங்களில் ₹ 70.79 கோடி மதிப்பீட்டு செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**வருவாய்**

**78.** ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 3,530 ஏழைக் குடும்பங்களுக்கு நிதி உதவியாக மொத்தம் ₹ 11.44 கோடி வழங்கப்பட்டுள்ளது. இலவச நிலம் வழங்கல் சட்டம், 1975-ன் கீழ் இவ்வாட்சிப்பரப்பில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் 94 தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**79.** “சன்சத் ஆதர்ஷ் கிராம யோஜனா” (கிராம மேம்பாட்டுத் திட்டம்) திட்டத்தின்கீழ், மணப்பட்டு கிராமத்தில் மேம்பாட்டுத் திட்டங்கள் பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக சில்பாலின் மூலம் அசோலா சாகுபடிக்கான செயல் விளக்கம் மற்றும் பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளிப்பது, REAP மூலம் தெருவிளக்குகளை மாற்றுவது, நூலகத்தைப் புதுப்பித்தல், திடக்கழிவுகளை சேகரிப்பது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## ஊரக மேம்பாடு

**80.** இவ்வாட்சிப்பரப்பில் வேலைவாய்ப்பினை குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வழங்கி அவர்களின் வறுமையை போக்கும் விதமாக மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 21.89 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 90,412 கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதன்மூலம், கடந்த நிதி ஆண்டில் 466 பணிகள் ₹ 58.49 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**81.** கடந்த ஆண்டு, 765 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதிலுள்ள 4,296 உறுப்பினர்கள் தேசிய கிராமப்புற வாழ்வாதார பணிகளின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். 3,717 சுய உதவிக்

குழுக்களுக்கு, சுழல் நிதி உதவியாக ₹ 65.42 கோடி வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ₹ 1.64 கோடி 109 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளதன் மூலம், 7,563 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். 30 கூட்டு வாழ்வாதாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு திறன் சார்ந்த தயாரிப்புகளைச் செய்வதற்கான மற்றும் கைப்பிடி தினை சார்ந்த 3 நாள் பயிற்சிகள் தமிழ்நாடு, தஞ்சாவூரில் உள்ள தேசிய உணவு தொழில்நுட்ப தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனத்தில் அளிக்கப்பட்டன. தீன்தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா (ஊரக ஏழை இளைஞர்களை தற்சார்பு உடையவர்களாக ஆக்கும் திட்டம்) திட்டத்தின்கீழ், 2,424 கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு அதில் 1,434 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு புதுச்சேரி, காரைக்கால், சென்னை, திருப்பூர் மற்றும் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**82.** ஷ்யாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் (பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, கிராமப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்) திட்டத்தின்கீழ், பாகூரில் 7 மீன் குட்டைகளை சீரமைத்தல் மற்றும் கிருமாம்பாக்கம் ஏரியை உணவகத்துடன் மேம்படுத்துதல் ஆகிய 2 பணிகள் ₹ 8.05 கோடி செலவிலும் மற்றும்

திருநள்ளாறு பகுதியில் 1.5 இலட்சம் லிட்டர் மற்றும் 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி கட்டுமானம், அத்திப்படுகை பாலம் கட்டுமானம், நல்லம்பல் ஏரியை மேம்படுத்துதல், சிறு உணவு பதப்படுத்தும் பிரிவை அமைத்தல் மற்றும் 7 பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் போன்ற 6 பணிகள், ₹ 11.29 கோடி செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன. பிரதம மந்திரியின் கிராம சாலைத் திட்டத்தின்கீழ், 31 சாலைப் பணிகள் 63.44 கி.மீ. நீளத்துக்கு ₹ 35.37 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

## பள்ளிக் கல்வி

**83.** அடுத்த தலைமுறையின் தலைவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புதிய சிந்தனையாளர்களை உருவாக்கும் உந்து சக்தியாக கல்வி விளங்குகிறது. நமது ஆட்சிப்பரப்பின் எதிர்காலம் இன்றைய குழந்தைகளை சார்ந்தே இருக்கிறது. எனவே, இவ்வாட்சிப்பரப்பின் ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான மற்றும் இலவச கல்வியை இந்த அரசு வழங்கி வருகிறது.

**84.** கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ், ₹ 1.89 கோடி செலவில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் உள்ள 145 பள்ளிகளில், ₹ 3.48 கோடி மதிப்பீட்டில் 290 நுண்திறன் வகுப்பறைகள் (Smart Classrooms) அமைக்கப்பட்டுள்ளன.

**85.** கடந்த கல்வியாண்டில், 126 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேனிலைப் பள்ளிகள் அனைத்தும் 6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை தமிழ்நாடு மாநிலக் கல்வி பாடத்திட்டத்திலிருந்து மத்திய இடைநிலைக் கல்வி வாரிய பாடத்திட்டத்திற்கு (CBSE) மாற்றப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இந்தப் புதிய பாடத்திட்டத்திற்கான பயிற்சிகள் 1,800 ஆசிரியர்கள் மற்றும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**86.** பள்ளி மாணவர்களின் கலைத்திறமையை வளர்த்து அதன் மூலம் அவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தி கல்வியில் கலையை ஊக்கப்படுத்தும் விதமாக மத்திய கல்வி அமைச்சகத்தின் ஒரு முயற்சியான “கலா உத்சவ்” என்ற பெயரில் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன.

**87.** “நிபுண் பாரத் திட்டம்” இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பு நிறைவு செய்யும் அனைத்து மாணவர்களும் மேம்பட்ட எழுத்தறிவு மற்றும் கணிதத்திறன் பெற்றிருப்பதை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது மேலும், LKG முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் திறன் அடிப்படையிலான

ஆற்றலை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தும். அது மட்டுமின்றி, எழுத்தறிவு மற்றும் கணிதத்திறன் கருத்தை பெற்றோர்களுக்கு அறியப்படுத்தும் விதமாக "நிபுண் பாரத் புதுவை நாள்" என்னும் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு அனைத்து அரசு ஆரம்ப பள்ளிகளிலும் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில், இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களில் இருக்கும் அனைத்து அரசு ஆரம்பப் பள்ளி மாணவர்களின் 40,000 பெற்றோர்கள் பங்கு பெற்று அவர்களின் ஆதரவுடன் எழுத்தறிவு மற்றும் கணிதத்திறனை பள்ளி மாணவர்களிடம் மேம்படுத்த பள்ளிகளுடன் பெற்றோர்கள் கரம் கோர்த்துள்ளனர்.

**88.** இதர பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கான மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்பிற்கான உதவித் தொகை வழங்கும் மாநிலக் கல்வி உதவித் தொகை திட்டங்களின்கீழ், 13,219 மாணவர்களுக்கு ₹ 81.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**89.** மதிய உணவுத் திட்டத்தின்கீழ், அதிக ஆரோக்கியத்துடன், மிகுந்த சத்துள்ள மற்றும் முழு சுகாதாரத்துடன் தயாரிக்கப்பட்ட சர்க்கரை பொங்கல் மற்றும் பலவகை கலவை சாதம், அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்

இத்திட்டத்தின் மூலம் முன்-மழலையர் முதல் மேனிலைப் பள்ளியில் பயிலும் 88,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், மாநில நிதி உதவியுடன் வாரம் மூன்று முட்டைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**90.** சட்டப்பேரவையில் இந்த அரசு உறுதியளித்ததின்படி, 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பள்ளிக்கல்வி இயக்ககத்திலிருந்து பிரிக்கப்பட்டு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான தனி இயக்குனரகம் இவ்வாட்சிப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

**91.** கடந்த ஆண்டு, ஜூன் மாதம் டில்லி, போபால் மற்றும் குவாலியர் ஆகிய இடங்களில் இந்திய பள்ளி விளையாட்டு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 66-வது தேசிய பள்ளி விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டியில் செல்வி ஹர்ஷிகா பங்கேற்று 64 கிலோ பளு தூக்கும் எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார் என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**92.** ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை புதுச்சேரி அரசுப் பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு இந்த அரசு 10 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கியதன் காரணமாக கடந்த ஆண்டு இந்த

ஒதுக்கீட்டின்கீழ், அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்புகளில் சேர்ந்து படிக்க சுமார் 20 அரசு பள்ளி மாணவர்கள் சேர்க்கை பெற்று பயன் பெற்றுள்ளனர். இது தவிர, அரசு நடத்தும் நீட் பயிற்சி வகுப்புகள் மூலம் பயிற்சி பெற்ற அரசு பள்ளி மாணவர்கள் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும் சேர்க்கை பெற்று பயன் பெற்றுள்ளனர் என்பதைக் குறிப்பிடுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**93.** சமூக மாற்றத்திலும் மற்றும் உண்மையான பொருளாதார வளர்ச்சியிலும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. பருவநிலையில் ஏற்படும் மாற்றம் சுற்றுச்சூழலுக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதோடு மட்டுமல்லாது மக்களின் நல்வாழ்வில் நேரடி தாக்கத்தையும் கொண்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு நிதித்துறையுடன் இணைந்து புது டெல்லியில் உள்ள ஆற்றல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவுடன் இவ்வாட்சிப்பரப்பில் 2023-24ஆம் ஆண்டுக்கான பசுமை சிறப்பு நிதிய திட்ட அறிக்கையை தயார் செய்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இந்தியாவிலேயே நமது ஆட்சிப்பரப்பில்தான் முதன் முறையாக

பசுமை சிறப்பு நிதிய திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை பற்றிய பிரேய்லி புத்தகம் (பார்வைத்திறன் பாதிப்படைந்தோருக்கான புத்தகம்) 2023ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தினத்தன்று வெளியிடப்பட்டது. நமது ஆட்சிப்பரப்பில் 526 பள்ளிகள் மற்றும் 47 கல்லூரிகள் ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழி இல்லாத வளாகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**94.** நீர் பகுதி உட்பட கடலோர பகுதியை திறம்பட திட்டமிடுதல் மற்றும் பல்வேறு பகுதியினருக்கு இடையிலான மோதல்களைத் தவிர்ப்பதற்கு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கான “கடல்சார் திட்டமிடலை” புவி அறிவியல் அமைச்சகம், இந்திய கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையம் தயாரித்துள்ளது. “கடல்சார் திட்டமிடலை” திறம்பட செயல்படுத்துவதற்காக இந்திய கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தால் “சகவ்” என்ற இணைய முகப்பு உருவாக்கப்பட்டுள்ளது. “ஜன் பாகிதாரி” (பொதுமக்கள் பங்களிப்புடன்) என்னும் கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணியின்கீழ், கடற்கரை மாசுபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி கடற்கரையை தூய்மைப்படுத்துதலை ஊக்கப்படுத்தும் விதமாக புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மாபெரும் கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## சுற்றுலா

**95.** பெருமைமிகு கடந்த காலம், துடிப்புமிக்க நிகழ்காலம் மற்றும் ஒளிமயமிக்க எதிர்காலம் கொண்ட இடமாக புதுச்சேரியை உருவகப்படுத்தியும், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு வழிமுறையாக நிலையான சுற்றுலாவை ஊக்கப்படுத்துவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

**96.** "சிறந்த சுற்றுலா கிராமம்-2023"-க்கான விருதை திருநள்ளாறு கிராமத்திற்கு மத்திய சுற்றுலா அமைச்சகம் வழங்கியுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், ஹைதராபாத்தில், மாநிலங்களுக்கிடையில் நடைபெற்ற உள்நாட்டு சுற்றுலா கண்காட்சியில் சிறந்த சுற்றுலாத் தகவல் கையேடுகள் தயாரித்தமைக்கான சிறப்பு விருது புதுச்சேரிக்கு வழங்கப்பட்டது.

**97.** பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருந்த 1,320 பங்கேற்பாளர்களுடன் 29-வது சர்வதேச யோகா திருவிழா வெகு சிறப்பாக புதுச்சேரியில் கொண்டாடப்பட்டது. இதேபோல், காரைக்கால் கார்னிவல்-2024 திருவிழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில், காரைக்கால் பகுதியிலிருந்தும், அருகில்

உள்ள தமிழக மாவட்டங்களிலிருந்தும் சுமார் 2 இலட்சம் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர். புதுச்சேரி கடற்கரைச் சாலையில், பாரம்பரிய கார்கள் அணி வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை சுமார் 5,000 சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளித்தனர். சுற்றுலாத் தொழில் முனைவோர் உள்ளடங்களாக சுமார் 700 பங்கேற்பாளர்களுடன் சுற்றுலாத் தொழில் முனைவோர் சந்திப்பு நடைபெற்றது.

**98.** ஆன்மீக சுற்றுலாவுக்கு புதுச்சேரி ஒரு புகழ் பெற்ற இடமாகும் மற்றும் இங்கு பல சித்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனை சித்தரிக்கும் வகையில், சித்தர் சுற்றுலா பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டு புதுச்சேரியிலுள்ள சித்தர் ஆலயங்கள், ஜீவ சமாதிகள் ஆகியவை பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

**99.** இவ்வாட்சிப்பரப்பை குடிசை வீடுகள் இல்லாத பகுதியாக்குவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த இலக்கை எட்டும் வகையில், புதுச்சேரி, ரெயின்போ நகர் அருகே மொட்டைத்தோப்பில்

15 குடியிருப்புகள் கொண்ட ஒரு தொகுப்பு ₹ 62.70 இலட்சம் மதிப்பீட்டு செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதேபோல், புதுச்சேரி அருந்ததிபுரம் சின்னபொய்கை நகரில் உள்ள குடியிருப்புத் தொகுதியில் மின் அளவீடு பலகைகள் பொருத்துவதற்கான மின்சார அறை ₹ 7.82 இலட்சம் மதிப்பீட்டு செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, பெரியவீராம்பட்டினம் தெற்கு வீதியில் நாகூரான்தோட்டம் சாலை மற்றும் கடற்கரை சாலை இடையே இணைப்புச் சாலையில் கான்கிரீட் சிமெண்ட் நடைபாதை ₹ 16.05 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**100.** பாரதப் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு பயனாளிகளுக்கு ₹ 65.20 கோடி வழங்கப்பட்டு 963 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1,810 புதிய பயனாளிகள் வீடுகள் கட்ட, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அவர்கள் வீடு கட்டும் பணியை தொடங்கியுள்ளனர். நில பயன்பாட்டு மாற்றம் மற்றும் அங்கீகரிக்கப்படாத வளர்ச்சிகளை முறைபடுத்துதலுக்கு வழிவகை செய்யும் விதமாக, நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதற்காக, இணையதள முகப்பு ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம்

**101.** நமது ஆட்சிப்பரப்பின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை கல்வி நிலையிலும் மற்றும் சமூக-பொருளாதாரத்திலும் மேம்படுத்த இந்த அரசு உறுதியாக உள்ளது.

**102.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி மேம்பாடு, பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கல்விக்கான முழுக் கட்டணத்தை வழங்கல் உள்ளடங்களாக 13,012 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு நிதி உதவியாக மொத்தம் ₹ 52.21 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**103.** ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களில் இருக்கும் பெண்களின் திருமணத்திற்கு உதவும் வகையில் 732 ஏழை குடும்பங்களுக்கு நிதி உதவியாக ₹ 6.79 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,468 ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவியாக ₹ 2.16 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**104.** தொடர் நோயினால் பாதிக்கப்பட்டு மற்றும் வேலைக்கு செல்ல இயலாத ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கு நிதி உதவியாக மாதம் ₹ 3,000 வீதம் 2,800 பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு வழங்கப்படும் இலவச துணிகளுக்கு மாற்றாக தலா ₹ 1,000 வீதம் 2,54,795 பயனாளிகளுக்கு ₹ 25.47 கோடி வழங்கப்பட்டுள்ளது. கலப்பு திருமணத் தம்பதியர்களுக்கு ஊக்கத் தொகையாக ₹ 2.50 இலட்சம் வழங்கப்பட்டு இதன் மூலம் 426 திருமணத் தம்பதியர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக, ₹ 10.65 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினக் குடும்பத்தில் இறந்தவர்களின் இறுதிச் சடங்கினை மேற்கொள்ள நிதி உதவியாக ₹ 25,000 வீதம் 1,562 குடும்பங்களுக்கு மொத்தம் ₹ 3.90 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**105.** பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்) திட்டத்தின்கீழ், வீடு கட்ட 544 குடும்பங்களுக்கு மொத்தம் ₹ 9.70 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், பாரத ரத்னா ராஜீவ் காந்தி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கல் வீடு கட்டுவதற்காக 126 பயனாளிகளுக்கு ₹ 1.42 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### சமூக நலம்

**106.** மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் சமுதாயத்தின் நலிவடைந்த வகுப்பினர்களை மேம்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**107.** கடந்த ஆண்டு, 360 புதிய பயனாளிகளையும் சேர்த்து 20,640 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவியாக மொத்தம் ₹ 63.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. இலவச அரிசிக்கு பதில் பண உதவியாக ₹ 9.23 கோடியும் மற்றும் இலவச துணிகளுக்கு பதிலாக பண உதவியாக ₹ 81.85 இலட்சமும் முறையே 20,640 மற்றும் 16,409 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 3,428 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் திருமண நிதி உதவி, எரிபொருள் மானியம், போக்குவரத்து படி, உதவித்தொகை, காதுகேட்க உதவும் கருவிகள் வழங்குதல், விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கான சக்கர நாற்காலி வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களுக்காக ₹ 1.38 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**108.** சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின், "மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தியேக அடையாள அட்டை" வழங்கும் திட்டம் ஏற்கனவே இவ்வாட்சிப்பரப்பில் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு வரை, 21,001 பிரத்தியேக அடையாள அட்டைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கர்ம வீரர் பெருந்தலைவர் காமராஜர் திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகளின் ஈமச்சடங்கினை செய்வதற்காக 288 மாற்றுத்திறனாளிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு கருணைத் தொகையாக ₹ 43.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**109.** பாரதப் பிரதமரின் சுரக்ஷா பீமா யோஜனா (விபத்துக் காப்பீட்டுத் திட்டம்) திட்டத்தின்கீழ் வரும் காப்பீட்டுச் சந்தா செலுத்துவதற்கான முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தில், 18 முதல் 70 வயது வரை உள்ள நபர் ஒருவர் ஆண்டுக்கு ₹ 20 சந்தா செலுத்தினால் இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுவார்கள். விபத்தின் காரணமாக நிரந்தரமாக செயல்பட முடியாத முழு ஊனம் மற்றும் மரணம் ஏற்பட்டால் ₹ 2 இலட்சமும் மற்றும் பகுதி உடல் ஊனம் ஏற்பட்டால் ரூபாய் ஒரு இலட்சமும் காப்பீடாக வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தில், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து சிவப்பு குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களின் ஆண்டுச் சந்தா தொகையை அரசே ஏற்றுள்ளது. இதற்காக, 4,85,680 சிவப்பு குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடையும் வகையில் ₹ 92.28 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**110.** புதுச்சேரி முதியோர் பராமரிப்பு சங்கம் (பாண்கேர்) மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் “உலக மூத்த குடிமக்கள் தினம்” கொண்டாடப்பட்டது. இதில், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், மூத்த குடிமக்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் போதை பொருள் ஒழிப்புக்கான தேசிய செயல் திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்டன.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**111.** பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, இந்தச் சமுதாய மக்களின் திறன்களை உயர்த்தும் நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. இதன் மூலம், இவர்கள் சமுதாயத்தில் முக்கிய பங்காற்ற முடியும்.

**112.** மக்கள் தலைவர் தியாகி வ. சுப்பையா விருது திட்டத்தின்கீழ், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 17 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை திட்டங்களின்கீழ், முறையே 249 மற்றும் 4,148 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதேபோல், மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை மற்றும் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகை திட்டங்களின்கீழ், முறையே 1,054 மற்றும் 990 சிறுபான்மையின மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்பக் கல்வி அடிப்படையிலான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 48 சிறுபான்மையின மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

**113.** இலவச உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், நிலுவைப் பயன்களான 380 சலவைப் பெட்டிகள், 220 முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு நாற்காலிகள் மற்றும் உபகரணங்கள் 62 நபர்களுக்கு தவில் ஆகியவை ஏழைக் கைவினைஞர்கள் முன்னேற்றம் அடைய ₹ 84.97 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் பல்வேறு பள்ளிகளில் பயிலும் 11,925 ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ₹ 4.88 கோடி மதிப்பில் மிதிவண்டிகள் மற்றும் ₹ 57.96 இலட்சம் மதிப்பில் மழை அங்கிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**114.** பெண்கள், நாட்டின் முக்கிய வள ஆதாரங்களை உருவாக்குபவர்களாக மட்டுமின்றி, ஒட்டுமொத்த மனித இன வளர்ச்சியையே தீர்மானிப்பவர்களாகவும் திகழ்கிறார்கள். எனவே, இந்த அரசு "பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கு" உறுதிபூண்டுள்ளது. பெண்களுக்கு அதிகாரமளிக்கும் செயல்முறையானது ஆண்-பெண் வேறுபாடின்றி அவர்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெறவும் வாய்ப்பளிக்கும்.

**115.** முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ், முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1,81,616 பயனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவியாக மொத்தம்

₹ 535.93 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2,200 இறந்த ஓய்வுதியதாரர்களின் ஈமச் சடங்கினைச் செய்வதற்கு நிதி உதவியாக ₹ 3.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில், வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பத் தலைவிகளுக்கு மாதாந்திர நிதி உதவி ₹ 1,000 வழங்கும் திட்டத்தின்கீழ், 36,000 குடும்பத் தலைவிகளுக்கு நிதி உதவியாக மொத்தம் ₹ 36.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**116.** பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இரண்டு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட 1,15,043 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கும் மற்றும் ஒரே உறுப்பினர் கொண்ட 15,748 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கும் துணிகளுக்கு பதிலாகப் பண உதவியாக மொத்தம் ₹ 12.29 கோடி நேரடிப் பணப் பயன் பரிமாற்ற முறையில் வழங்கப்பட்டுள்ளது.

**117.** மகளிர் மேம்பாட்டிற்காக இந்த அரசு, ஏழைப் பெண்கள் மற்றும் விதவைகளின் மகள் திருமணத்திற்கான நிதி உதவி, ஏழைப் பெற்றோர்களின் குடும்பத்தில் 8ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் ஒரே பெண் குழந்தைகளுக்கு நிதி உதவியாகத் தேசிய சேமிப்பு சான்றிதழ் வழங்குதல் மற்றும் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்ப கட்டுபாடு செய்துகொண்ட பெற்றோர்களின் குடும்பத்திற்கு நிதி உதவியாக வைப்பு நிதி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களின்கீழ், 2,119 பயனாளிகள் பயனடையும் வகையில் ₹ 5.50 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**118.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் புதியதாகப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்கும் முதலமைச்சரின் அரவணைப்பு என்ற புதிய திட்டம் கடந்த நிதியாண்டில் தொடங்கப்பட்டது. இதில், புதியதாகப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு “சுகன்யா சம்ரித்தி யோஜனா” (செல்வமகள் சேமிப்பு திட்டம்) திட்டத்தின்கீழ், ₹ 50,000 வைப்பு செய்யப்படும். கடந்த ஆண்டு 2,100 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ₹ 10.50 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**119.** ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ், ஊட்டச்சத்துமிக்க இணை உணவு 29,172 குழந்தைகளுக்கும் மற்றும் 6,473 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி பயனாளிகளுக்கு ஆண்டுக்கு 65 நாட்கள் விடுமுறை நாட்களுக்கான இணை உணவு, வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, கடந்த ஆண்டு மொத்தம் ₹ 7.41 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**120.** பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், இந்தச் சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 6,614 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (ஆயுள் காப்பீட்டு திட்டங்கள்) திட்டங்களின்கீழ், 807 அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் 260 அங்கன்வாடி உதவியாளர்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர்.

**121.** விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காகவும் மற்றும் மேம்பாட்டுக்காகவும், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு சமமான வாய்ப்பளித்து சமுதாயத்தின் மற்ற பிரிவினருக்கு இணையாகக் கொண்டு வரும் பொருட்டு அவர்களை உயர்த்திடவும் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

**122.** அமைதியை விரும்பும் இவ்வாட்சிப்பரப்பு, மக்களின் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் பற்றி பயனுள்ள வகையிலும், உபயோகமான வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த கூட்டத் தொடரில் விவாதிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**123.** உங்கள் விவாதங்கள் வெற்றியடைய என்னுடைய நல்வாழ்த்துகள்.

ஜெய்ஹிந்த்……

நன்றி!

வாழ்க பாரதம்!!

வளர்க புதுச்சேரி!!!



காந்தி சதுக்கம், கடற்கரைச் சாலை, புதுச்சேரி.

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.